28.04.2025

LAOP.No. 127 of 2004

CW 2 திரு.பெரியசாமி

சாட்சி கோ.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

கோ.த.சா.ஆ.17 மதிப்பீட்டு அறிக்கையானது 14.02.2001 தேதி அடிப்படையில் தயார் செய்யப்பட்டது. மதிப்பீடானது 14.02.2001 தேதி நிலவரப்படி கொடுக்கப்பட்டது. நான் மதிப்பீட்டு அறிக்கை கொடுத்தேன் கோருனர் என்னை 2024ல் தொடர்பு கொண்டார். நான் 2001 நிலவரப்படி மதிப்பீட்டு அறிக்கை கொடுத்தேன். 14.02.2001 தேதியில் நான் ஆய்வு எதுவும் செய்யவில்லை. நான் தாக்கல் செய்த 28.02.2025 தேதியிட்ட மதிப்பீட்டு அறிக்கை கோ.த.சா.ஆ.18 ஆனது 01.01.2014 நிலவரப்படி மதிப்பீடு செய்யப்பட்டு அறிக்கை தயார் செய்யப்பட்டது. இந்த இரண்டு மதிப்பீட்டு அறிக்கையிலும் குறிப்பிட்டு நான் நேரடியாக ஆய்வு செய்து அறிக்கை தயார் செய்ததாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்றால் சரியல்ல. நான் களத்திற்கு செல்லாமல் இந்த மதிப்பீட்டு அறிக்கையை தாக்கல் செய்திருக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் களத்திற்கு சென்றிருக்கின்றேன். களத்திற்கு சென்றதை காட்டும் ஆதாரமாக புகைப்படம் வைத்திருக்கின்றேன். அதனை நான் என் மதிப்பீட்டு அறிக்கையோடு தாக்கல் செய்திருக்கின்றேன். தேதி எனக்கு நினைவில்லை. நான் கள ஆய்விற்கு சென்ற பொழுது மதிப்பீட்டு அறிக்கையில் சொல்லிருக்கின்ற கட்டமைப்பு அங்கு இல்லை. என்னிடம் காட்டப்படும் கோ.த.சா.ஆ.16 என்னுடைய லைசன்ஸ். எனக்கு லைசன்ஸ் கொடுக்கப்பட்ட தேதி 26.06.2002. அந்த லைசன்ஸ் பத்தி 3ல் ' You must intimate to the undersigned and the Commissioner of incom Tax concerned as soon as you, accept emploment either with the Government/Public Sector undertaking or with any Private employer. The Registation will remain suspended for the period you remain in employment and the Valuation report made. If any during this period will be treated as invaild' என்று சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த விதிமுறைப்படி நான் இன்கம்டாக்ஸ் கமிசனரிடம் தகவல் தெரிவித்துள்ளேனா என்றால் நான் எந்த ஒரு Employment லும் இல்லை. அதனால் தகவல் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. எனக்கு கொடுக்கப்பட்ட லைசன்ஸ் பத்தி 4ல் ' Instances of the

Violation of the instructions mentioned at ii and iii above, if any, brough to the notice of the undersigned will render your registration as a valuer liable to be cancelled under section 34 AD of the Wealth Tax Act' என்று எனக்கு கொடுக்கப்பட்ட லைசன்ஸில் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த சரத்துப்படி எனக்கு லைசன்ஸ் வழங்கியுள்ள இன்கம் டாக்ஸ் கமிசனருக்கு தகவல் தெரிவிக்காததால் என்னுடைய லைசன்ஸ்படி நான் மதிப்பீட்டு அறிக்கை எதுவும் கொடுக்க தகுதியற்றவர் என்றால் சரியல்ல. மேலும் எனக்கு லைசன்ஸ் 26.06.2002 தேதியில் வழங்கப்பட்டிருப்பதால் அதற்கு முன்னிட்ட காலங்களுக்கு நான் மதிப்பீடு அறிக்கை வழங்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் கோருனர் தரப்பு கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் களத்திற்கு சென்று ஆய்வு செய்யாமல் டேபிள்டாப் ரிப்போர்ட்டாக என்னுடைய மதிப்பீட்டு அறிக்கையை தாக்கல் செய்திருப்பதால் என்னுடைய மதிப்பீட்டு அறிக்கை ஏற்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. கோருனர் என்னிடம் கொடுத்த ஆவணங்களின் அடிப்படையில் தான் மதிப்பீட்டு அறிக்கையினை தயார் செய்தேன். பொதுப்பணித்துறை அலுவலர்கள் இடிக்கப்படாமல் இருந்த கட்டிடத்தை ஆய்வு செய்து மதிப்பீட்டு அறிக்கையை கொடுத்திருக்கும் நிலையில் நான் இடிக்கப்பட்ட இல்லாத கட்டிடத்தை ஆய்வு செய்யாமல் கொடுத்திருக்கும் மதிப்பீட்டு அறிக்கையை ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. நான் லைசன்ஸின் சரத்துகளுக்கு முரணாக அறிக்கை கொடுத்திருப்பதால் என்னுடைய அறிக்கை லைசன்ஸ் விதிகளுக்கு முரனானது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.